<u>வாக்குமூலம்</u>

<u>மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.</u>

<u>முன்னிலை:– திரு. A. கந்தகுமார்., எம்.எல்.,</u>

<u>மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ), மயிலாடுதுறை,</u>

<u>அமர்வு வழக்கு எண் 52/2023</u>

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 | நாள் | 06.07.2023 |
| பெயர் | தெட்சிணாமூர்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட குற்ற பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.03.2003 அன்று போக்குவரத்து பிரிவில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். 15 மணிக்கு மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் மோகனவேல், பாலையூர் காவல் ஆய்வாளர் அமிர்குமார் அவர்களுடன் பாதுகாப்பு பணிக்கு சென்றிருந்தேன். 19 மணிக்கு மயிலாடுதுறை மேம்பாலத்தில் இருந்து விடுதலை சிறுத்தை இயக்கத்தினர் ஊர்வலம் வரும் போது நானும் 1023, 928, 1060, 1309 அவர்களுடன் ஊர்வலம் முன்பகம் நடந்து கொண்டு வரும் போது 19.30 மணிக்கு செம்மங்களம் அருகில் நம்பர் 1 ரோடு காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த வழியாக ஊர்வலம் போக சொன்னார்கள். ஊர்வலம் வந்தவர்கள் நம்பர் 2 ரோடு வழியாக போக வேண்டும் என்று தகராறு செய்து நம்பர் 1 ரோடு வழியாக செல்ல முடியாது என்றும் நம்பர் 2 ரோடு வழியாக தான் போவோம் என்றும், எங்கள் தலைவர் வருவதாக சொல்லி இவ்வழியாக தான் சொல்வோம் என்று இளந்தென்றல், கள்ளங்கிளி ஆகியோர் கற்கலாலும், கழியாலும் வலது பக்க வயிற்றில் அடித்தனர். என்னையும் என்னுடன் வந்தவர்களை மயிலாடுதுறை ஆய்வாளர் மோகன் அவர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். எதிரிகளில் சிலர் அரசு பேருந்தை கற்கலால் அடித்தார். நான் அரசு மருத்துவ மனையில் வெளிநோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். மறுநாள் அதிகாலை 3 மணிக்கு மயிலாடுதுறை ஆய்வாளர் அவர்களிடன் மயிலாடுதுறை பேருந்து நிருத்தம் அருகில் நின்று கொண்டிருந்த மூன்று போரை காவல் நிலையத்திற்கு கைது செய்து சென்றோம். 14.03.2003 அன்று பெரம்பூர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன்.

<u>1 முதல் 13 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

தற்போது நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவ மனையில் நான் வெளிநோயாளியாக சிகிச்சையில் இருந்த போது மருத்துவரிடம் மூன்று தெரிந்த நபர்கள் என்னை தாக்கியதாக தான் கூறினேன். அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக மருத்துவரிடம் நான் எதுவும் கூறவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் 19 மணிக்கு ஊர் வலம்

கிளம்பி 19.30 மணிக்கு செம்மங்கலம் அருகில் கூட்டமாக வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 13.03.2003 அன்று மாலை 6 மணிக்கு ஊர்வலம் துவங்கி கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அனுமதி பெற்ற சாலை மாகாதான தெருவிற்கு சென்றடைந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய காவல் நிலையத்தில் பந்தோவோஸ் பணிக்கு செல்வது பற்றிய குறிப்புகள் எனது அலுவலகத்தில் ஜி.டியில் உள்ளது. எனது பணி குறித்து எனது கையெழுத்து எனது பணி குறிப்பில் எனது கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவ மனையில் இருந்த போது 14.03.2003 அன்று ஆய்வாளர் நான் பணியில் இருந்ததை உறுதி செய்வதை குறித்து நாட்குறிப்பை வாங்கி பார்த்தார். முதல் விசாரணையில் சொல்லியிருந்தது போல் எனக்கு அன்றைய தேதியில் பணி வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பந்தோஸ்வுஸ் பணியில் ஈடுபட்டிருந்தேன் என்று எவ்வித முகாந்திரமும் இல்லாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஊர்வலத்தில் போலீஸ் தரப்பில் வீடியோகிராப்பர் மூலம் வீடியோ எடுக்கப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் யார் யாரையும் தாக்கப்படவில்லை என்றால் சரியல்ல. விடுதலை சிறுத்தை கட்சி தமிழ்நாட்டில் மதமாற்றம் தடை சட்டத்தை எதிரிப்பு முதல் பொது கூட்டம் நடத்திய விபரம் எனக்கு தெரியாது. விடுதலை சிறுத்தை கட்சி பொது கூட்டத்தை பொது கண்டண கூட்டத்தை தமிழ்நாட்டில் எங்கும் நடத்த கூடாது என்பதற்ாகவும், அரசு மற்றும் ஆளுங்கட்சி மற்றும் காவல் துரையினர் கூட்டத்தில் பங்கேற்ற நபர்கள் மீது நடக்காத சம்பவத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாததானால் போலீஸ் விசாரணையிலும் மருத்துவ அதிகாரிடமும் முரண்பட்டு வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளில் சிலர் அரசு பேருந்தை கற்கலால் அடித்தார்கள் என்று வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.